(6 pages)

**Reg. No. : ......................................**

**Code No. : 7215** **Sub. Code : ZTLM 41**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2024

Fourth Semester

தமிழ் — Core

பண்டை இலக்கியம்

(For those who joined in July 2021-2022)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புணர்தலும் புணர்தல் நிமித்தமும் எத்திணைக்குரியது?

   (அ) குறிஞ்சி (ஆ) முல்லை

   (இ) மருதம் (ஈ) நெய்தல்

2. தமிழில் முழுமையாகக் கிடைக்கும் முதல் இலக்கண நூல் எது ?

   (அ) நன்னூல் (ஆ) அகத்தியம்

   (இ) தொல்காப்பியம் (ஈ) வீரசோழியம்

3. அழிசி மன்னனின் காட்டில் உள்ள நெல்லிக்கனியை தான் பெற்றதாகக் கனவு கண்டது எது?

   (அ) வௌவால் (ஆ) ஆந்தை

   (இ) குயில் (ஈ) மயில்

4. கொங்குதேர் வாழ்க்கை என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் யார் ?

   (அ) கபிலர் (ஆ) பரணர்

   (இ) இறையனார் (ஈ) நக்கீரர்

5. ஐயையின் தந்தை பெயர் என்ன?

   (அ) அழிசி (ஆ) அத்தி

   (இ) தித்தன் (ஈ) கரிகாலன்

6. 'கொலேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும் புல்லாள்' யார்?

   (அ) குறமகள் (ஆ) ஆயமகள்

   (இ) உழவன் மகள் (ஈ) தலைவி

7. இரணியனை வதம் செய்யத் திருமால் எடுத்த அவதாரம் எது?

   (அ) கூர்ம அவதாரம் (ஆ) மச்ச அவதாரம்

   (இ) வாமன அவதாரம் (ஈ) நரசிம்ம அவதாரம்



Nesamony Memorial Christian College, Marthandam

8. பத்துப்பாட்டில் உள்ள மிகப்பெரிய நூல் யாது ?

(அ) முல்லைப்பாட்டு

(ஆ) மதுரைக்காஞ்சி

(இ) பெரும்பாணாற்றுப்படை

(ஈ) கூத்தராற்றுப்படை

9. வீரர் அல்லது மற்றொருவர் போல் வேடமிட்டுப் பாடுபவர் ஆடுபவர் யார்?

(அ) பாணர் (ஆ) பொருநர்

(இ) கூத்தர் (ஈ) விரலியர்

10. 'நீர் செல நிமிர்ந்த மாஅல்' -யார் ?

(அ) சிவன் (ஆ) திருமால்

(இ) இந்திரன் (ஈ) முருகன்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) அரசு உருவாக்கம் குறித்த செய்திகளைக் கட்டமைக்க.

(அல்லது)

(ஆ) திணைகளின் பெயர்கள் பற்றி நீவிர் அறியும் செய்திகளைப் பட்டியலிடுக.



12. (அ) வரைவு நீட்டித்த வழி தோழி தலைவனுக்குக் கூறி வரைவுகடாவிய அறிவுடைநம்பி பாடலை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறுந்தொகைப் பாடல்கள் வழி அறத்தொடு நிற்றல் துறையை மதிப்பிடுக.

13. (அ) பண்டைத் தமிழர் திருமண முறை அகநானூற்றில் போற்றப்படுதலைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) நடுகல் வழிபாடு குறித்து விவரிக்க.

14. (அ) திருமாலிருங்குன்றத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஏ விளங்கு தடக்கை - வரையறை செய்க.

15. (அ) விறலியின் வர்ணனையை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) நல்லோர் விரிச்சி கேட்டு நிற்றலை முல்லைப்பாட்டு வழி உணர்த்துக.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.

16\. (அ) அகப்புறக் கோட்பாடுகளை விளக்கி அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) திணை வைப்பு முறையைப் பகுத்தாராய்க.

17\. (அ) இயற்கையோடு இயைந்த மனித வாழ்க்கையை விளக்குவது நற்றிணைப் பாடல்கள் எனும் கூற்றை நிறுவுக.

(அல்லது)

(ஆ) செலவு அழுங்குவித்த பத்து உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18\. (அ) அகநானூற்றுப் பாடல்கள் சுட்டும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) ஏறுதழுவுதல் கலித்தொகையில் எங்ஙனம் போற்றப்பட்டுள்ளது? விவரிக்க.

19\. (அ) சேரனின் வீரத்தைக் காக்கைப் பாடினியார் போற்றியுரைக்கும் விதத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பாண்டியர்களின் வரலாற்றுச் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.



20\. (அ) கரிகாலனின் விருந்தோம்பல் பண்பைப் சிறப்பிக்க.

(அல்லது)

(ஆ) முல்லைப்பாட்டு தலைவியின் நிலையினை உணர்த்துக.

---



*Nesamony Memorial Christian College, Marthandam*